Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் – 37 இதழ் – 1 ஜனவரி – 2024

தனிப்பிரதி
ரூ.10/-



ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !!

# 24 –ஆம்

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள்
## & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

இடம் :

**YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு – சென்னை இரயில் மார்க்கத்தில்,
ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

**நாள் : மே, 6, 7, 8 - 2024**

**(திங்கள், செவ்வாய், புதன்)**

## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. ஆராதனையின் மாதிரி 13
3. பெண்கள் பகுதி 15
4. வாலிபர் பகுதி 18
5. சிறுவர் பகுதி 21
6. புதிய வாழ்க்கை 23
7. எதை முதலாவது செய்ய... 26
8. போராட்டக்காரன் யாக்கோபு 39


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 37 Jan - 2024 Issue - 1


ஆசிரியர் உரை

## தேவ வழிநடத்துதலும், பராமரிப்பும்

**ச**பையில் நாம் பாடும் பாடல்களில் எனக்குப் பிடித்தமான ஒன்று **ஜீவிக்கிறார், இயேசு ஜீவிக்கிறார்** என்பது. அப்படியானல், தேவன் உண்மையாகவே இன்றைக்கு ஜீவிக்கிறாரா? அதாவது உயிரோடிருக்கிறாரா? நமக்கானவைகளைத் தந்து நம்மை வழிநடத்துகிறாரா ? அவர் நம்மோடு தொடர்பு கொள்கிறாரா ? நாம் ஜெபிக்கும்போது பதிலளிக்கிறாரா ? அல்லது தேவன் உலகத்தை இயங்கச் செய்துவிட்டு, தூரத்திலிருந்து வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறாரா? இவைகளைப் பற்றித் தான் நாம் படிக்கப் போகிறோம்.

இரண்டு கேள்விகளுடன் நாம் ஆரம்பிக்கலாம். **முதலாவது,** தேவனுடைய வழிநடத்துதல் என்றால் என்ன? **இரண்டாவது,** தேவன் மனிதனுடைய வாழ்வில் இன்று எப்படிக் கிரியை செய்கிறார்? இக்கேள்விகளுக்கு வேறுபட்ட பதில்கள் உண்டென்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவது, கடவுள் இல்லை என்று சொல்லும் நாத்திகர்களின் பார்வை (Atheist View) : கடவுள் எவ்விதக் கிரியையும் நடப்பிப்பதில்லை. ஏனெனில், கடவுளென்று ஒருவர் இல்லை. எனவே, நாமெல்லாரும் இப்பிரபஞ்சத்தில் தனியாயிருக்கிறோம் என்று நினைக்கிறார்கள்.

இரண்டாவது, கால்வினிஸ்ட் பார்வை (Calviuist view): இவர்கள் ஜான் கால்வின் என்பவரின் கொள்கையை பின்பற்றுபவர்கள் வாழ்வில் நடப்பவையெல்லாம் முன் குறிக்கப்பட்டவை என்றும் ஒவ்வொன்றும் ஒரு காரணத்தினிமித்தமாகவே நடக்கிறது என்றும், நினைக்கிறார்கள். தற்செயலாக ஒன்றும் நடப்பதில்லை. நடக்கிற ஒவ்வொன்றும் தேவன் அப்படி நடக்க வேண்டும் என்று நினைப்பதால் அப்படி நடக்கிறது என்று நினைக்கிறார்கள்.

மூன்றாவது, இயற்கைச் சமயவாதிகளின் பார்வை (Deist view) இவர்கள் கடவுள் ஒருவர் இருக்கிறாரென்று நம்புகிறார்கள். ஆனால், அவர் நம்மோடு எவ்விதத் தொடர்பும் கொள்வதில்லை. எல்லாவற்றையும் அவர் பார்க்கிறார். ஆனால், அவர் ஒன்றும் செய்வதில்லை. அனைத்தும் இயற்கையான முறையில் நடக்கிறது என்று நினைக்கிறார்கள்.

நான்காவதாக, ஆவியானவரின் வரங்களை நம்புபவர்களின் பார்வை (Charistmatic View): தேவன் நம்முடைய அன்றாட வாழ்வில் கிரியை நடப்பிக்கிறார். பெரும்பாலும் அற்புதங்கள் மூலம் கிரியை நடப்பிக்கிறார் என்று நினைக்கிறார்கள்.

ஆனால், அருமையானவர்களே, இன்றைக்கு நம்டைய வாழ்வில் தேவன் எப்படிக் கிரியை செய்கிறார் என்பதை மேலுள்ள எந்தப் பார்வையும் சரியாகச் சொல்வதில்லை.

தேவன் நம்முடைய வாழ்வில் அவருடைய சித்தத்தின்படி நம்மைப் பராமரித்து வழிநடத்துகிறார் என்று நான் உங்களுக்கு செல்லுகிறேன். உண்மையில், Providence என்று நேரிடையான பொருள் தரும் வார்த்தை தமிழ் வேதாகமத்தில் இல்லை. அப்போஸ்தலர் 24:3 ல் பராமரிப்பு Providence என்னும் வார்த்தை ஒரே ஒரு முறை வருகிறது. அங்கும் கூட அது தேவனுடைய பராமரிப்பு பற்றிப் பேசுவதில்லை. ரோம அதிகாரி அவர்களைப் பராமரித்து வழிநடத்துகிறபடியால் அது பற்றிப் பேசுகிறது. ஆனால், இவ்வார்த்தை வேதாகமத்தில் இல்லையென்பதாலேயே தேவன் நம்மை வழிநடத்திப் பராமரிப்பதில்லை என்கிறாகி விடாது.

தேவன் பராமரித்து வழிநடத்துகிறார் என்பதை வேதாகமம் முழுவதிலும் நாம் பார்க்க முடியும். ஆங்கிலத்தில் இதை Providence என்று அழைக்கிறார்கள். இதில் Pro - vidence. "Pro" என்றால் "முன்னமே" (before) என்பது. இவ்வார்த்தையின் அடுத்த பங்காக இருக்கின்ற vidence" என்ற பதத்திற்கான பொருள், ‘பார்க்க முடிகின்ற (being able to see) என்பது. ஆங்கிலத்தில் உள்ள Video என்னும் வார்த்தைக்கு இதுதான் மூல வார்த்தை. ஆக, பராமரிப்பு (Providence) என்பதற்கு சொல்லர்த்த ரீதியிலான பொருள். **முன்கூட்டியே பார்த்தல்**‘ (To see before) என்பதாக உள்ளது. பரலோகத்தின் தேவன், காரியங்களை முன்கூட்டியே பார்க்கிறார். உண்மையில், Provision என்ற ஆங்கில வார்த்தைக்கான பொருள் விளக்கம் இப்படியாக இருக்கும். அதாவது ஒரு தேவை அல்லது எதிர்மறையான ஒரு சம்பவம்‘ ஏற்பட இருக்கும் போது, அதினிமித்தம் முன்கூட்டியே ஆயத்தமாவது. அது குறித்துத்தான் நாம் இப்போது பார்த்து, கொண்டிருக்கிறோம் தேவன் தன்னுடைய பலத்தினாலும், வல்லமையினாலும், ஞானத்தாலும் நம் தேவைகளை முன்கூட்டியே பார்த்து. நம்மைப் பராமரிக்கும்படி செயல்படுகிறார். அதன் மூலம்

தேவன் நம் வாழ்வில் கிரியை செய்கிறார். நம்மை வழிநடத்திப் பராமரிக்கிறார். நம்மில் அக்கறைப்படுகிறார். ஆம், தன்னுடைய பராமரிப்பின் மூலம் நம்மை கவனித்துக் கொள்கிறார்.

இப்பொழுது, நாம் விவாதிக்கப் போகும் முதல் காரியம் மிக முக்கியமான ஒன்று. **அது பராமரிப்புக்கும், அற்புதங்களுக்கும் உள்ள வேறுபாடு.**

கடந்த காலங்களில் தேவன் தம்டைய ஜனங்களை அற்புதங்கள் வாயிலாகப் பராமரித்து வழிநடத்தினார். மத்தேயு 14 ல், இயேசு 5000 பேரை போஷித்தபோது, அவர்களுடைய சரீரத் தேவைகளுக்கானவை களைச் சந்தித்தார். ஆனால், அதை ஓர் **அற்புத வழியிலே** வழங்கினார். இயற்கை வழி செயல்பாட்டு விதியை ஒதுக்கி வைத்து விட்டு, அற்புதவிதமாக இடைப்பட்டார். யாத்திராகமம் 14ல், தேவன் செங்கடலை இரண்டாகப் பிளந்தபோது **ஓர் அற்புதத்தின் வாயிலாக** இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திப் பாதுகாத்தார். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், தேவன் இயற்கை விதிகளை மீறி காரியமாற்றியுள்ளார்.

அன்பானவர்களே, வேதாகமத்தின் நாட்களிலேயே கூட, அற்புதங்கள் ஒரு **விதியாக** இல்லாமல் **விதிவிலக்காகவே** இருந்துள்ளன. நம்மில் அநேகர், வேதாகமத்தின் ஆரம்பகாலம் முதல் வெளிப்படுத்தல் நூல் முடியும் வரைக்கும் தேவன் எப்போதுமே அற்புதங்கள் செய்து வந்தார் என்று தவறாக நம்புகிறோம். எனவே, இன்றைக்கு நம் வாழ்வில் எதிர்பார்க்கும் அற்புதங்கள் நடக்க வில்லையென்றால், என் வாழ்வில் தேவன் அக்கறைகொண்டு செயல்படுவதில்லை எண்ணி விடுகிறோம்.

நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். நேற்று இரவு நீங்கள் ருசித்து சாப்பிட்ட உணவு எங்கிருந்து உங்களுக்கு வந்தது ? தேவன் அந்த ஆகாரத்தை உங்களுக்கு அருளினாரா ? நீங்கள் பருகின தண்ணீர் எப்படிக் கிடைத்தது? இவைகளை தேவன் உங்களுக்குத் தந்தாரா ? நிச்சயமாக !

இஸ்ரவேல் ஜனங்களுக்கு கன்மலையிலிருந்து வந்த தண்ணீருக்கும் (யாத் 17) நீங்கள் சாப்பிடும்போது பருகின தண்ணீருக்கும் ஏதாகிலும் வேறுபாடு உண்டா ? நண்பர்களே, எவ்வித வேறுபாடும் இல்லை. இரண்டையும் தேவன் தான் அருளினார். நீங்கள் பெற்றுக்கொண்ட தண்ணீர் அற்புதமாக கொடுக்கப்படவில்லை என்றாலும் அது தேவனிடத்திலிருந்து தான் வந்தது.

சரி, வேதாகமத்தின் காலத்தில் மிகுதியான அற்புதங்கள் 5 முறை மட்டுமே நடந்திருப்பது உங்களுக்குத் தெரியுமா ?

1. **சிருஷ்டிப்பின்போது** (**In Creation**) ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த பொழுது மிகுதியான அற்புதங்கள் நடந்தேறியது.

2. **இஸ்ரவேல் ஜனங்களின் யாத்திரையின் போது ( At the exodus )** எகிப்திலே பத்து வாதைகள், செங்கடல் பிளந்தது, பத்துக் கட்டளைகள் என்று. இவைகளெல்லாம் இஸ்ரவேல் ஜனங்களை தேவன் வழிநடத்தினபோது நடந்தது. ஆனால், வாக்குத்தத்த பூமிக்குள் பிரவேசித்த பிறகு. அங்கே எத்தனை அற்புதங்கள் நடந்தது ? எரிகோவின் **மதில்கள் விழுந்ததற்குப் பின், யோசுவா சூரியனை நிறுத்தியது தவிர பெரிதாக அற்புதங்கள் நடைபெறவில்லை. அப்படியானால், அவர்கள் ஒவ்வொரு பட்டணமாக, தேசமாகப் பிடித்த போது தேவன் அவர்களோடிருந்து கிரியை நடப்பிக்கவில்லையா ?** நிச்சயமாகவே நடப்பித்தார்.

3. **எலியா மற்றும் எலிசாவின் நாட்களில் (Elijah and Elisha's days )** மிகுதியன அற்புதங்கள் நடைபெற்றிருக்கிறது : எலியாவின் அற்புதங்கள், 7. எலிசாவின் அற்புதங்கள் 14 ; மொத்தத்தில் அங்கே 21 அற்புதங்கள். ஏன் இவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகள் என்றும், இவர்களின் செய்தி தேவச் செய்தி என்றும் நிரூபிப்பதற்காக அப்படி நடந்திருக்கிறது. இதன் மூலம் தீர்க்கதரிசிகளின் மூலம் செய்யப்படும் வேலைகள் தன்னுடையதென்று தேவன் உறுதிப்படுத்தினார். எகிப்தில் இச்செய்தி தேவனிடத்திலிருந்து வந்தது' என்றும், சீனாய் மலையில், இக்கட்டளை தேவனிடத்திலிருந்து வந்தது என்றும் மோசேயால் சொல்லப்பட்டுள்ளது.

4. **தானியேல் பாபிலோனுக்குள் சென்ற போது (When Daniel gets over into Babylon)**

அங்கே மிகுதியான அற்புதங்கள் நிகழ்ந்தது. ஏன் ? அவன் கர்த்தரை அறியாத மண்ணில் இருந்தான். எனவே, இவன் தேவனுடைய மனிதன் என்று அறியப்பட வேண்டியிருந்தது. ஆகவே, நேபுகாத்நேச்சாரின் கனவுகளுக்கு தேவனாலே தானியேல் மூலம் அர்த்தம் கொடுக்கப்பட்டது. சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ அக்கினி சூளையிலும், தானியேல் சிங்கக் குகையிலும் போடப்பட்டனர். ஏன் ? அதன் மூலம் தேவன் தன்னுடைய செய்தியையும், அதைச் சுமந்து வந்தவர்களையும் உறுதிப்படுத்தினார்.

இயேசுவும், அப்போஸ்தலர்களும் வாழ்ந்த காலங்களில் மிகுதியான அற்புதங்கள் நடை பெற்றிருக்கிறது. இக்காலகட்டத்தில் அநேக அற்புதங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்ததை நாம் காண முடியும். ஆனால், அதன் பிறகு அவ்வளவாக அற்புதங்கள் நடைபெறவில்லை

இதன் பொருள், தேவன் அற்புதங்களே செய்யவில்லை என்பதல்ல. அற்புதங்கள் எப்பொழுதும் விதிவிலக்காகவே இருந்துள்ளது. ஆகவே தான், அற்புதங்களினிமித்தம் ஜனங்கள் எப்பொழுதும் ஆச்சரியமடைந்துள்ளனர். அற்புதங்கள் நடப்பதை ஜனங்கள் அடிக்கடி காணவில்லை. இது எதை நமக்கு செல்லுகிறது?

அற்புதங்கள் அவ்வப்போது தான் நடந்திருக்கிறது. ஆனாலும், மனிதர்கள் வாழ்வில் அவர் எப்பொழுதும் கிரியை நடத்தியுள்ளார். சில பேர் இப்படியாகச் சொல்லுவார்கள். கிறிஸ்துவின் சபையாராகிய நீங்கள்' அற்புதங்களை நம்புவதில்லை, எனவே இன்றைக்கு தேவன் அற்புதக் கிரியை நடத்துகிறார் என்பதையும் நம்புவதில்லை' என்று

அருமையானவர்களே முதலாவது, நாங்கள் அற்புதங்களை நம்புகிறோம். வேதாகமத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அற்புதங்கள் ஒவ்வொன்றையும் நாங்கள் மனதார நம்புகிறோம். அதே வேளையில், அற்புதங்கள் நின்று போயிற்று என்று சொல்லும் 1 கொரிந்தியர் 13, எபேசியர் 4 இன்னும் சில வேத பகுதிகளையும் நாங்கள் நம்புகிறோம்.

இரண்டாவது, இன்றைக்கு அற்புதங்கள் இல்லையென்று நாங்கள் நம்புவதாலேயே நம் வாழ்வில் தேவன் கிரியை செய்கிறார் என்பதை **நாங்கள் நம்புவதில்லையென்று பொருளாகி விடாது.** நிச்சயமாக தேவன் கிரியை நடப்பிக்கிறார். வேதாகம சரித்திரத்தைக் கவனித்தால், பெரும்பாலான தேவனுடைய கிரியைகள் அற்புதங்கள் மூலமாக நடைபெறவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இன்றைக்கு நாங்கள் தேவனுடைய வழிநடத்துதல் குறித்து பேசும் போது அற்புதங்களுக்கும், தேவனுடைய பராமரிப்புக்கும் **வேறுபாடு உண்டு** என்று நாங்கள் குறிப்பிடுகிறோம். அதாவது, தேவன் இன்றைக்கு **நமது வாழ்வில் கிரியை செய்கிறார்** என்றும், அதே வேளையில் **இயற்கைச் சட்டங்களுக்கு அப்பால் அற்புதங்கள் மூலம் கிரியை செய்வதில்லை**யென்றும் கூறுகிறோம்.

உதாரணமாக, ஒரு சகோதரன் மருத்துவமனையில் இருக்கும்போது, தேவன் அவனுக்கு உதவி செய்யும்படியாக ஊக்கமாக ஜெபிக்கிறோம். அதே வேளையில் அந்த மனுஷனுடைய கடுமையான இருதயப் பிரச்சனை ஓர் அற்புதம் நிகழ்ந்து உடனடியாகத் தீர வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்ப்பதில்லை. ஆனால், தேவன் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இயல்பான மருத்துவத்தின் மூலம் அவனை குணப்படுத்துவார் என்று நம்புகிறோம். வேறுபாடு புரிகிறதா?

இன்னும் சில பேர் இப்படியாகக் கூறுவார்கள், நீங்கள் அற்புதங்களை நம்பாததால், தேவன் இப்பொழுது வல்லமையுள்ளவர் என்பதையும் நீங்கள் நம்புவதில்லை' என்று. இக்கூற்றை, 'நான் முழுமையாக நிராகரிக்கிறேன். மருத்துவமனையில் உள்ள அந்தச் சகோதரனுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்தில் சம்பந்தப்பட்டுள்ள வல்லமையை நீங்கள் கவனியுங்கள். அந்த ஜெபத்திற்கு தேவன் எப்படி பதிலளிக்கப் போகிறார் ? முன் கூட்டியே காரியங்களைப் பார்க்கும் தேவத்திட்டபடி உங்களுக்கு அறிமுகமான ஓர் இளைஞன் சில ஆண்டுகளுக்கு மருத்துவக் கல்லூரி செல்கிறார். படித்து முடித்து

அவர் உங்கள் பகுதிக்கே மருத்துவராக வருகிறார். அந்தக் குறிப்பிட்ட நாளில் அந்நபருக்கு சிகிச்சை அளிக்க கூடிய மருத்துவராகி விடுகிறார். அதன் மூலம் பூரண சுகம் அடைகிறார். தேவனுடைய பராமரிப்பில் எவைகளெல்லாம் சம்பந்தப்பட்டிருந்ததென்று எனக்குத் தெரியாது. ஆனால், இந்த காரியத்தில் சம்பந்தப்பட்டுள்ள தேவனுடைய வழிநடத்தும் வல்லமை எவ்வளவு ஆச்சரியமா யிருக்கிறது என்று சொல்ல வருகிறேன். எனவே, தேவன் இன்றைக்கும் உலகில் அற்புதங்கள் மூலமாக இல்லாமல், அவருடைய திட்டத்தின்படியும், பராமரிப்பின்படியும் கிரியை செய்கிறவராகவே இருக்கிறார்.

2. **இரண்டாவதாக நீங்கள் கவனிக்க வேண்டுவது என்னவெனில், தேவன் வெளிப்படுத்தினாலொழிய அவருடைய பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள குறிப்பிட்ட செயல்களை நம்மால் அடையாளம் காண முடியாதென்பது. இது சற்று ஆழமான கருத்து, கவனமாக கேளுங்கள்.**

ஓர் அற்புதம் என்றால், அது தேவனிடத்திலிருந்து தான் வருகிறதென்பது வெளிப்படையாகத் தெரியும். அதே வேளையில், சில சமயங்களில் தேவன் **அற்புதங்களல்லாத அளவிலும்** கிரியை நடப்பிக்கிறார்

உதாரணமாக, யோசேப்பு எகிப்தில் இருந்ததை எண்ணிப் பாருங்கள். யோசேப்பு எகிப்துக்குச் செல்ல நேர்ந்த எல்லாச் சூழலையும் எண்ணிப் பாருங்கள். (பலவருண அங்கி, சகோதரர்களாலே அடிமையாக விற்கப்பட்டது, போத்திபார் வீட்டில் நடந்தவை, பார்வோனிடத்தில் பணிபுரிந்தது மற்றும் பஞ்ச காலத்தில் தன் குடும்பத்தாருக்கு உணவு அளிக்கும் இடத்திற்கு உயர்ந்தது. இவைகளெல்லாம் நடந்ததற்குப் பின் யோசேப்பு தன் சகோதரர்களிடம் இப்படியாகச் சொன்னான். **தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பினார்** என்று (ஆதியாகமம் 45:8) இன்னும், ஆதியாகமம் 50-20 ல் யோசேப்பு, **நீங்கள் எனக்குத் தீமை செய்தீர்கள்; தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடிய பண்ணினார்**' என்று சொன்னான். சரி, இவைகளெல்லாம் தேவனுடைய திட்டப்படி தான் நடந்ததென்பதை நாம் எப்படி அறிய முடியும் ? வேதாகமம் அப்படியாகச் சொல்லுகிறது. நாம் அதை நம்புகிறோம். அவ்வளவே! மனிதர்களுடைய வாழ்வில் தேவன் தனது திட்டத்தின்படியாகவும், பராமரிப்பின் படியாகவும் கிரியை செய்கிறார் என்பதற்கு யோசேப்பின் வாழ்க்கை ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

ஆனால், சில நேரங்களில் நம்முடைய வாழ்வில் இதுபோன்று ஏதாவது ஒரு காரியம் நடக்கிறதை **நாம் காணும் போது 'நாம் இது தேவனுடைய பராமரிப்பின்படியானது' என்று சொல்லும்படி**

**நேரலாம்.** ஒருவேளை, அது அப்படி இருக்கலாம் அல்லது அப்படி இல்லாமலும் இருக்கலாம். இதை நாம் அறிந்து கொள்ள முடியாது. ஒரு தேவனுடைய பிள்ளையாக நாம் இக்காரியத்தில் மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.

நாம் யாக்கோபு 1:17 படி, நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் தேவனிடத்திலிருந்து வருகிறதென்பதை அறிந்திருக்கிறோம். தேவனிடத்திலிருந்து வராமல், எந்த ஒரு நன்மையும் நம்முடைய வாழ்வில் ஒருபோதும் வருவதில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட செயலை நாம் பார்த்து, **தேவன் தான் இது நடக்கும்படி செய்தார்** என்று சொல்வதில் சில சமயங்களில் ஆபத்து இருக்கிறது.

இதை ஓர் உதாரணம் மூலம் விளக்க நான் முற்படுகிறேன். எஸ்தர், மொர்தெகாய் சம்பவம் பற்றியும், அப்பொழுது எல்லாவற்றையும் குறித்து எண்ணிப்பாருங்கள். ராஜாவின் மனைவியாகிய வஸ்தி (தன்னடக்கத்திற்கு மதிப்பளித்து) ராஜாவின் அரண்மனையிலிருப்பவர்கள் தன் அழகைக் காணும்படி அழைக்கப்பட்டபோது வர மறுத்தபடியால் பட்டத்து ராணி என்ற பதவியிலிருந்து தள்ளப்பட்டாள் என்பதை அறிவோம்.

ஒரு சமயத்தில் ராஜாவாகிய ஆகாஸ்வேருவின் மேல் பிரதானிகள் கை போட இருந்ததை மொர்தெகாய் கேட்டு, அந்த ராஜாவுக்கு தகவல் கொடுத்து ராஜாவின் உயிரைக் காப்பாற்றினான் (எஸ்தர் 2:22). ஆனால், இதற்கு எவ்வித நன்மையும்அவனுக்கு ராஜாவால் செய்யப்படாமலிருந்தது.

அடுத்து 127 நாடுகளில் இருந்த பெண்களுக்குள் யூத பெண்ணான) எஸ்தர் எப்படி ராணியானாள் என்பதையும், அதே வேளையில் ஆமான் எல்லா யூதர்களையும் (தேவனுடைய ஜனங்கள்) கொல்லும்படி உத்தரவு பெற்றான் என்பதையும் எண்ணிப்பாருங்கள் அச்சமயத்தில் ஒவ்வொரு நாளும் நடந்த சம்பவங்களையும் நினைத்துப்பாருங்கள். அங்கே, பட்டத்து ராணியாக இருந்த எஸ்தர் யூத குல மக்களைக் காப்பாற்றும்படி செயல்பட வேண்டிய நாள் வந்தபோது, மொர்தெகாய் சொல்லுவதை கவனியுங்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி **உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும்** 7 என்றான் (எஸ்தர் 4:14).

இது குறித்து நீங்கள் சிந்திக்க வேண்டுகிறேன். அங்கே மொர்தெகாய், 'இந்தக் காலத்தில் நீ உதவி செய்யும் பொருட்டே **தேவன் உன்னை நிச்சயமாய் அங்கே உட்கார வைத்தார்** என்று மொர்தெகாய் சொல்லவில்லை. ஏனெனில், தேவனிடமிருந்து நேரிடையான வெளிப்பாடு இருந்தாலொழிய அப்படிச் செல்லமுடியாது. **யாருக்குத் தெரியும்** ? என்றே மொர்தெகாய் சொன்னான். ஒருவேளை, இது தேவனுடைய திட்டமாகக்கூட

இருக்கலாம் என்று பொருள்படும் அளவிலேயே மொர்தெகாய் கவனமாகச் சொல்லியிருக்கிறான்.

நண்பர்களே, நம்முடைய வாழ்விலும் நடப்பவைகளை நாம் எண்ணிப் பார்த்து, இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி தேவன் என்னை வைத்திருக்கலாமோ என்று எண்ணிப் பார்ப்பது சுவாரசியமாக உள்ளது அல்லவா? தேவனுடைய பராமரிப்பின்படியாக ஒருவேளை இப்பொழுது நீங்கள் இருக்கிற வேலையில் இருப்பது கூட உங்களுடன் பணிபுரியும் ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்காக இருக்கலாம். இப்பொழுது அது நடக்காவிட்டாலும் கூட பின்னாளில் வளரும்படியான ஒரு விதையை நீங்கள் அங்கே விதைப்பதற்காகக் கூட இருக்கலாம். ஒருவர் உண்மையாகவே சத்தியத்தைத் தேடுகிறவானாயிருந்தால், அவனால் சத்தியம் கண்டுபிடிக்கத்தக்க அளவில் தேவன் சூழ்நிலையை ஏற்படுத்துவார் என்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

ஏன் நான் இதை நம்புகிறேன் ? ஏனெனில், **மத்தேயு 7:7-11** வசனங்களில் தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள் என்று இயேசு வாக்களித்துள்ளார். **அப்போஸ்தலர் 17:27,** கர்த்தரைக் கண்டடையத்தக் கதாகவே மனிதன் படைக்கப்பட்டிருக்கிறானென்றும், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல என்றும் கூறுகிறது. **ரோமர் 1:20** உண்டாக்கப்பட்டிருப்பவைகள் தேவன் இருக்கிறார் என்பதற்கு இயல்பான சாட்சிகளைக் கொண்டிருப்பதால், அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை' என்கிறது. 2 **பேதுரு 3:9,** 'எல்லாரும் இரட்சிக்கப்பட தேவன் விரும்புகிறார் என்று கூறுகிறது இவைகளோடு, மத்தேயு 7:7-ல் சொல்லப்பட்டுள்ள **தேடுகிறவன் கண்டடைவான்** என்பதையும் சேர்த்துப் பாருங்கள். எனவே, தேவன் தனக்கே உரிய பராமரிப்பின்படி, சத்தியத்தை உண்மையாய்த் தேடுகிறவர்கள் அதைக் கண்டு பிடிக்கும்படியான திராணியையும், வாய்ப்பையும் கொடுக்கிறார் என்ற முடிவுக்கு நாம் வர முடியும்.

அப்படியானால், தேவன் இதை எப்படி நடப்பிக்கிறார் ? என் மூலமாகவோ, நான் குடியிருக்கத் தெரிந்தெடுக்கும் வீட்டின் மூலமாகவோ, நான் வேலைக்குச் சேரும் அலுவலகம் அல்லது கம்பெனியின் மூலமாகவோ, அல்லது வேறு ஏதாவது சூழல் மூலமாகவோ இது நடக்கலாம். என் வாழ்வின் பல நேரங்களில் இது தேவனுடைய வழிநடத்துதல் அல்லது பராமரிப்பு' என்று சொல்லும்படியாக நான் சோதிக்கப்பட்டிருக்கிறேன். ஆயினும், அது அப்படித்தான் என்று தேவனிடத்திலிருந்து நேரிடையான வெளிப்பாடு இல்லாமல், அதை நாம் உறுதியாக அறிய முடியாது. ஆனால், ஒவ்வொரு நாளும் தேவன் என்னை இப்படியாகப் பயன்படுத்தலாம் என்பது சுவாரசியமாக இருக்கிறது.

வேறொரு உதாரணமும் தருகிறேன். பவுலடியார், ஒநேசிமு மற்றும் பிலமோன், இம்மூவரையும் எண்ணிப் பாருங்கள். ஒநேசிமு

தவறு செய்த வேலைக்காரன், பிலமோனை விட்டு ஓடிப்போகிறான். பிலமோனை பவுல் ஏற்கனவே அறிந்திருந்தான். ஒநேசிமு ரோமாபுரியில் இருக்கும் அதே சமயத்தில் பவுலும் அங்கு போய் இருக்க நேர்ந்த சம்பவங்களை எண்ணிப் பாருங்கள். இது குறித்து சிலர், பவுல் செசரியாவில் இருக்கும்படி தேவன் எண்ணியதால், அங்கே பவுல் இரண்டு ஆண்டுகள் இருந்தார் என்று சொல்லுவார்கள். ஆனால், பாருங்கள் கப்பற்சேதம் நடந்தது, பவுல் ரோமாபுரி நோக்கி செல்லும்படியான சம்பவங்கள் அடுத்தடுத்து நடந்தது. அத்தோடு ஒநேசிமு ஓடிப் போகும் படியான சூழ்நிலையும் நடந்தேறியது. சில பேர், தேவன் தான் ஒநேசிமுவை ஓடிப்போக சொன்னார் என்று சொல்வார்கள். சிலபேர், தேவன் பவுலையும், ஒநேசிவையும் சந்திக்கும்படி செய்து அதன் மூலம் அவன் கிறிஸ்தவனானான் என்றும், வேறு சிலர், தேவன் இவை எல்லாம் நடக்கும்படி செய்தார் என்று சொல்லுவார்கள். ஆனால், இவைகள் பற்றியெல்லாம் **வேதாகமம் என்ன சொல்லுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?** பவுல் பிலமோனுக்கு எழுதிய நிருபம் 15 ம் வசனத்தில், 'அவன் **என்றென்றைக்கும் உம்டையவனாயிருக்கும் படிக்கு உம்மை விட்டுப் பிரிந்து போனானாக்கும்** என்றான். அது வாழ்க்கையை எவ்வளவு சுவாரசியமாக்குகிறதென்று உங்களுக்குப் புரிகிறதா ? வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வையும் பார்க்கும்போது (சாதாரண, அன்றாட) ஒருவேளை இதற்காக நான் இந்த மனிதனோடு வாழ்வில் இருக்கிறேனா அல்லது இந்தக் காரியத்திற்காக இந்த மனிதன் என்னோடு இருக்கிறாரா என்று எண்ணத் தோன்றுகிறது.

அன்பர்களே, வாழ்க்கை நம்பமுடியாத அளவிற்கு சுவாரசியள்ளதாயிருக்கிறது. நான் இன்று வீடு திரும்பும்போது சத்தியத்தை அறிந்து கொள்ள விரும்பும் ஒருவரிடம் நின்று உரையாட வேண்டியிருக்கலாம். நீங்கள் வேதாகம ஆசிரியர்களாக இருக்கிறீர்களா ? ஒருவேளை, உங்கள் வகுப்பில் உள்ள ஓர் இளம் மாணவன், உலகத்தை மாற்றக்கூடிய ஒரு மகத்தான பிரசங்கியாராகலாம், யாருக்குத் தெரியும்? தேவன் என்னை மிகவும் மகத்தான ஓர் நோக்கத்திற்காக பயன்படுத்தலாம் என்பதை அறியும்போது வாழ்க்கை மேலும் சுவாரசியமாகிறது

பல வருடங்களுக்கு முன், ஒரு மனிதன் சிறையில் இருந்தார் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது. வேறொரு பட்டணத்தில் இருந்த ஒரு சகோதரர் அவருக்கு வேதாகம அஞ்சல் வழிப்பாடம் அனுப்பியிருந்தார். அவர் அதைப் படித்து புரிந்து ஞானஸ்நானம் பெற முடிவு செய்தார். ஆனால், சிறை வார்டன் அதற்கு அனுமதி தரவில்லை. ஏனெனில், ஒரு கைதியை வெளியேவிடுவது மிகப்பெரிய ஆபத்தை உள்ளடக்கியது. எப்படியோ சிறையிலிருந்த அந்த மனிதர் அருகிலிருந்த கிறிஸ்துவின் சபை விலாசத்தைக் கண்டுபிடித்து, தொலைபேசியில் அழைத்தார். தன்னுடைய சூழ்நிலையை விளக்கினார். சம்பந்தப்பட்ட ஊழியர் இதற்காக சிறைக் காவலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது

அனுமதி மறுக்கப்பட்டது. விடாப்பிடியாகக் தொடர்ந்து முயற்சித்து ஓர் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒருநாளில் அந்த மனிதனை கையிலிருந்த விலங்குகளோடு காவலர்கள் பாதுகாப்பாகக் கூட்டி வந்தனர். அவர்கள் அவனை மிகவும் குளிர்ந்த தண்ணீர் தொட்டிக்குள் இறக்கி, ஞானஸ்நான காரியங்களுக்கு அனுமதி கொடுத்தார்கள். மீண்டும், விலங்குகளோடு இருந்த அவனை வெளியே தண்ணீரிலிருந்து தூக்கி எடுத்தார்கள். பிறகு, ஊழியக்காரர் வாழ்த்துக்கள் சகோதரனே' ! என்றார். மறுபடியும் அவர் அவனைப் பார்க்கவில்லை. அதன் பிறகு அவனுக்கு மரண தண்டனை நிறைவேறியது. அந்த மனிதனுடைய வாழ்வில் தேவனின் பராமரிப்பு செயல்பட்டதென்று நீங்கள் நம்புகிறீர்களா ? எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. தேவன் கண்டிப்பாக பராமரித்து வழிநடத்துகிறவராக உள்ளார். நற்செய்தியை சபை வாயிலாகவும், சபைப் பிரசங்கியார் வாயிலாகவும் சிறையிலிருந்த மனிதனுக்கு வழங்கினார். ஆனால், அந்தக் கைதி தன் வாழ்வில் காரியங்கள் இப்படியாக நடக்குமென்று நினைத்திருப்பாரா?

சில வருடங்களுக்கு முன் ஒரு பேர் பெற்ற ஊழியக்காரர் சாலை விபத்தில் சிக்கி நடக்க முடியாதபடி ஊனமாகிவிட்டார். எஞ்சிய காலமெல்லாம் நகரும் நாற்காலியில் காலத்தைக் கழிக்க வேண்டுமென்ற நிலை. ஆனால், இது குறித்து அவர் வாழ்வில் பெற்றிருக்கவே முடியாத சில நன்மையான காரியங்களுக்கு திறவுகோலாக இருந்தது என்று சொல்லுகிறார். எப்படியெனில் விபத்திற்குப் பிறகு அவருடைய வீட்டின் அறைகளையும், அமைப்பையும் நகரும் நாற்காலிக்கு ஏற்ப மாற்றியமைக்க நேர்ந்தது. அவ்வேலை நடந்த போது, வேலைக்கு வந்த பணியாட்கள் 4 பேருக்கு நற்செய்தி சொல்லி திருமுழுக்கின் மூலம் கர்த்தருக்குள் வழிநடத்தினார்

பிறகு அந்த ஊழியக்காரர் வியாபாரிகள் கூட்டமைப்பில் பொருளாதாரம் பற்றியும், வேதாகமம் பற்றியும் பேசும்படி சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்டார். அவர் தனக்கு நேர்ந்த விபத்து பற்றியும், வேதாகம சத்தியம் பற்றியும் அக்கூட்டத்தில் சக்கர நாற்காலியில் அமர்ந்து பேசிய வீடியோ வைரலாகி பல்லாயிரம் பேர் பார்க்கும் ஒன்றாக மாறி, அநேகர் சத்தியத்தை அறிந்து கொண்டார்கள்.

இப்படி, இவ்வளவு நற்காரியங்கள் நடந்திருந்தாலும், தேவன் தான் இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்று சொல்ல முடியுமா ? அப்படி சொல்ல முடியாது. ஏனென்றால், தேவன் சுற்றித் திரிந்து வாகன விபத்துக்களை ஏற்படுத்துகிறார் என்று நாம் நம்புவதில்லை. ஆனால், இந்த விபத்தின் மூலம் அநேகர் சத்தியத்தைக் கேட்கும் வாய்ப்பை தேவனால் ஏற்படுத்தியிருக்க முடியுமா என்று கேட்டதற்கு, அவர் நிச்சயமாக இருக்கலாம் என்று அந்த ஊழியக்காரர் சொன்னார்.

அருமையானவர்களே! நீங்கள் ஒருவேளை உண்மைச் சத்தியத்தைத் தேடுகிறவராக இருக்கலாம். நீங்கள் இந்நாளில் இக்கட்டுரையை படிப்பது கூட உங்கள் ஆத்துமாவிற்காக தேவனுடைய வழிநடத்துதலின்படியான திட்டமாக இருக்கலாம். யாருகுத் தெரியும்? ஆமென்!! ✝

# ஆராதனையின் மாதிரி

**J.C. சோட்**

சென்ற மாத தொடர்ச்சி...

5. ஆராதனையில் பாடல்களை பாட தனிப்பட்ட ஒரு பாடகர் குழு எங்களிடம் இல்லை. ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் பாடவேண்டுமென வேதவாக்கியம் கற்பிக்கிறது. எனவே, சபை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பாடுகிறோம். பவுல் கூறியது போல, ‘என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாக இருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன். [I கொரி.14:14, 15].

6. ஈஸ்டர், கிறிஸ்மஸ் போன்ற சிறப்பு ஆராதனை நாட்கள் எங்களுக்குக் கிடையாது. ‘நாட்களையும் மாதங்களையும், காலங்களையும் வருடங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்‘ என பவுல் தமது கலாத்திய சகோதரர்களை எச்சரித்தார். [கலா 4:10, 11].

7. நாங்கள் கர்த்தரின் பந்தியில் தினந்தோறும், அல்லது மாதத்திற்கு ஒரு முறை, அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை கலந்து கொள்ளுவதில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அல்லது வாரத்தின் முதல்நாளில் நாங்கள் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளுகிறோம். ஆதி கிறிஸ்தவர்கள் இவ்வாறு செய்தார்கள் என நாம் படிக்கிறோம். [அப். 20:7] வாரத்தின் எந்த முதல் நாளில்? எது என்று கூற யாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது? ஒவ்வொரு வாரத்திலும் ஒரு முதல் நாள் உண்டு. அந்த நாளில் தான் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளக் கூடுகிறோம். நாம் கொடுக்கவும், கற்றுக் கொள்ளவும் கூடிவரும் போது, கர்த்தரின் பந்தியில் கலந்து ’ கொள்ளவும் கூடி வருகிறோம்.

8. கர்த்தரை ஆராதிக்க நாங்கள் எவ்விதமான நடைமுறைகளையோ, பாரம்பரியங்களையோ, சடங்குகளையோ, செய்வதில்லை. ‘**உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்** என பேதுரு கூறினார். [1 பேதுரு 1:18]. அத்தோடு பவுல், ‘லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும்,

ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனிதர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல‘ என எச்சரித்தார். [கொலோ. 2:8].

9. மனிதச் சட்டங்களையும் கொள்கைகளையும் நாங்கள் பின்பற்றுவதில்லை. அப்போஸ்தலர் பவுல் எழுதினார்: ‘நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனிதனுடைய கற்பனைகளின் படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே‘. [கொலோ. 2:20-22].

9. பழைய ஏற்பாட்டின் நியாயப் பிரமாணத்தை நாங்கள் ஆராதனையில் பின்பற்றுவதில்லை. பலர் சனிக்கிழமை ஆராதனை, தசமபாகம் கொடுத்தல், பாடல்களில் இசைக் கருவிகளை பயன்படுத்துதல் இன்னும் இதுபோன்ற நியாயப் பிரமாணச் சட்டங்களைப் பின்பற்றுகின்றனர். ஆனால், இது வேத வசனங்களின் அப்பகுதியை தவறாகப் பயன்படுத்தும் வேலையாகும். நியாயப் பிரமாணம் இன்று நம்மைக் கட்டுப் படுத்துவதில்லை. [II கொரி. 3 : எபி. 10:9, யோவான் 1:17].

எனவே, நாம் புதிய ஏற்பாட்டில் எதையும் சேர்க்காமல், அல்லது எடுத்துப் போடாமல், அல்லது மாற்றாமல் அதை அப்படியே கடைபிடிக்க வேண்டும். [வெளி. 22:18,19: கலா. 1: 7-9]. எந்த நற்கிரியையும் செய்ய மனிதனை அது முற்றிலும் தகுதியுள்ள வனாக்குகிறது. [2 தீமோ. 3:16,17], ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவும் அதன் பக்கங்களில் அடங்கியுள்ளன. [2 பேதுரு 1:3].

இந்த வகை ஆராதனைக்கு மக்கள் அனைவரும் திரும்புவதுடன், மதத்தின் பெயரால் அவர்கள் செயல், சொல் ஆகிய சகல காரியங்களிலும் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பினால், நாம் மத ஒற்றுமையுடன் இருக்க முடியும். நிச்சயமாக, என்னை ஒருவிதமாக ஆராதனை செய்யவும், உங்களை வேறு ஒருமாதிரியாக ஆராதனை செய்யவும் கர்த்தர் கட்டளையிட வில்லை. மாறாக, நாம் அனைவரும் ஒரே மாதிரியாக, தம்மை - ஆராதிப்பதையே அவர் விரும்புகிறார். அவர் நமக்கு அளித்திருக்கிற ஒரே உண்மை மாதிரியை நாம் பின்பற்றும்போது, நாம் அனைவரும் ஒரே மாதிரியாக ஆராதிக்க முடியும்.

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவ வாழ்க்கை பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை

சகோ. ரேச்சல் நாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! புத்தாண்டு வாழ்த்துக்களுடன் உங்களோடு கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்வதற்கு தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்கு அவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை என்பதினாலே ஏதோ முடியாத செயலைச் செய்ய வேண்டி நேரிடுமோ, நம்மை அந்நியப்படுத்திக் கொள்ள வேண்டுமோ, இது சாத்தியமா, அப்படி என்ன அது கட்டா யமா? என்றெல்லாம் எண்ணத் தோன்றும். அருமையானவர்களே! இது ஏதோ என்னுடைய வார்த்தை அல்ல, ஆலோசனையல்ல, பரலோகத் தின் தேவன் ஆதிமுதற்கொண்டு தன் மக்களிடம் கட்டளையாக, அக் கறையாக, எதிர்பார்ப்போடு சொன்ன வார்த்தை தான் தோற்றத்திலும், பண்பாட்டிலும், பார்வையிலும், பேச்சிலும் ஒருவரை அப்படியே பிரதிபலிப்பது என்பது பிரித்தெடுத்தல் என்பதைப் புரிந்து கொள்ள உதவி செய்யும். இதற்கு அருமையான சான்று நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்''(I கொரி ;11:1) என்று பவுல் கூறுவது. தொடர்ந்து செய்யும் பாவத்திலிருந்து நம்மை நாமே பிரித்து புனிதமான ஒன்றிற்காக தேவனுக்கு அர்ப்பணிப்பது பிரித்தெடுத்தல், அல்லது பிரிந்து வருதல்.

**I தீமோ: 1:13 ல் பார்க்கிறபடி;**

ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒழுங் காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாயிருக்க வேண்டும். நாம் பிற ருக்கு வழிகாட்டுகிறவர்களாய் இருக்க வேண்டும். நமக்கு வேத வசனத்தை மாதிரியாய் வைத்துக் கொள்ள வேண்டும் II தெச :3:9 ல் பார்த்தால் நமக்காக நாம்தான் வேலை செய்ய வேண்டும் **உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்**

**பதினாலே அப்படிச் செய்யாமல் நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டு மென்றே அப்படிச் செய்தோம்.**

பரிசுத்தவான்கள் எல்லோரும் மாதிரியான வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்திருக்கிறார்கள் என்று பாருங்கள். உலகை விட்டு பிரிந்து வாழும் போதுதான் இதன் அர்த்தம் புரியும். I கொரி 4:3 ல் சுவிசேஷமானது கெட்டுப் போகிற வர்களுக்கு மறைபொருளாயிருக்கிறதென்று வாசிக்கிறோம். இப்பிர பஞ்சத்தின் தேவனாகிய பிசாசு சுவிசேஷத்தின் ஒளியைப் பார்க்கக் கூடாதபடி அவர்களுடைய கண்களை குருடாக்கினான் என்று. உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிதென்று அறிந்திருக்கிறோம் என்று I யோவான் 5:19-ல் வாசிக்கிறோம்.

அருமையானவர்களே நாம் வாழும் உலகம் இப்படியிருக்க நாம் பிரிந்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வது சாத்தியமா என்று நினைக்கிறீர்களா? வேண்டவே வேண்டாம். பரிசுத்த தேவ எழுத் துக்கள் பரிசுத்த வேதாகமத்தில் அருளப் பட்டுள்ளது. நம்மைப் போல பாடுள்ள மனிதர்கள்தான் பரிசுத்தமாயும், வசனத்தின்படியும் வாழ்ந் திருக்கிறார்கள் என்பதை வேதத்தில் படித்து தெரிந்து கொள்ள முடியும்.

அருமையானவர்களே! நாம் ஏன் இயேசுவை நோக்குவதில்லை நாம் படும் எல்லாப் பிரச்சனைகளையும் அனுபவித்த ஒருவர் இருப் பாரானால் அவர்தான் இயேசுகிறிஸ்து. பின் ஏன் அவரைத் தேடக் கூடாது? அவரைப் பற்றித் திட்டமாய் படித்துத் தெரிந்து கொள்ள ஏன் மனது இடம் கொடுப்பதில்லை? ஏன் பிறந்தார், ஏன் மரித்தார், ஏன் உயிர்த் தெழந்தார் என்பதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூட தெரிந்து கொள்ள நேரமுமில்லை, மனதும் இல்லை தேவையுமில்லை என்ற மெத்தனப் போக்கோடு வாழ்ந்து கொண்டுள்ளோமா? குடும்பம், உறவு, கல்வி, செல்வம், சொத்து, சுகம் இவைகள் நிரந்தரம் என்று எண்ணிக் கொண்டுள்ளோமா? பின் ஏன் இயேசுவின் காரியங்களில் அவரின் உபதேசங்களில் ஓர் அசட்டை! மன்னித்து விடுவார் என்று ஓர் பொய் சமாதானம் செய்து கொள்ளுகிறோமா?

அன்பான சகோதரிகளே! தேவனாகட்டும், நம் இரட்சகராகிய இயேசுவாகட்டும் அன்றிலிருந்து இன்றுவரை தன் பக்கம் நிற்பதற்கு ஆட்களைத் தேடுகிறார்கள். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்

அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பதைச் செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

மத்தேயு 7:13,14 வசனங்களின்படி இயேசுவுக்காக நாம் பிரிந்து வாழும் வாழ்க்கைப் பாதையானது இடுக்கமும், நெருக்கமுமானது தான். 21,23 வசனங்களில் பிதாவின் சித்தம் செய்யாதவர்களும் ஆகா, ஓகோ என்று பேசப்படுவார்கள். யோவான் 2:15-17-ல் உலகத்திலும் ,உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் என்று சொல்கிறார். ரோமர் 12:2: இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்க வேண்டாமென்று சொல்கிறார். நாம் உலத்தாராயிராதிருந்தால் உலகம் நம்மைப் பகைக்கும் (யோ:15:19) நாம் நேரத்தை கழிக்கும் விதம் (பே:4 :1-4), நாம் பேசும் பேச்சு (I யோவான் 4:4,5) இவைகள் யாவும் வேதம் எதிர்பார்க்கிறபடி இருக்க வேண்டும்.

நம்மை நேசித்துக் கொண்டேயிருக்கும் இயேசுகிறிஸ்து பிதாவை நோக்கி ஜெபித்தபோது யோவான் 17:15-ல் நீர் அவர்களை உலத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்கிறேன் என்று ஜெபித்தார். இவர்தான் இயேசு. நம்மீது உயிரையே வைத்திருக்க இயேசு அவரைப் பின்பற்றுபவர்கள் தீமை செய்யக் கூடாது என்பதில் எத்தனை அக்கறை எத்தனை பாரம். இந்த அன்பு இயேசுவுக்காக இந்தப் பாழும் உலகப் பழக்கவழக்கங்களில் இருந்து நாம் நம்மைப் பிரித்து வாழக் கற்றுக் கொள்ளக் கூடாதா?

அன்பான சகோதரிகளே! முழுமையான கிறிஸ்தவ வாழ்கை வேண்டுமென்பதற்காக நாம் சில பாடங்களைக் கற்றோம். மிகவும் அத்தியாவசியமான இக்கருத்துக்களை நம் வாழ்க்கையில் கடைப்பிடிப்போம்! தேவனும், இயேசுவும் அதற்கு உதவி செய்வார்கள் உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை (யாக் :4:4) நம் சிநேகம் யாரிடம் இருக்க வேண்டும்? சிந்திப்போம்! ✝

## மன்னிப்பு

**கசப்பின் கதவையும், பகையின் கைவிலங்கையும் உடைத்தெறியும் சாவி மன்னிப்புதான். இச்சாவியை பலர் பயன்படுத்தாததால் தான் இவ்வுலகம் சமாதானமும், சந்தோஷமும் இல்லாமல் சிக்கித் தவிக்கிறது.**

வாலிபர் பகுதி

# திராட்சைத் தோட்டத்தில் ஓர் அத்திமரம்

Dr. ஏபில் நாயகம்

**வா**லிபர்களே! தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒரு புதிய ஆண்டை நம் வாழ்வில் கண்டிருக்கிறோம். வருடத்தை நன்மையினால் முடிசூட்டும் நம் தேவன் இந்தப்புதிய வருடத்தை நம் ஒவ்வொருக்கும் ஆசீர்வாதமானதாக இருக்கும்படி செய்வாராக!

ஒவ்வொரு புதிய வருடமும் நமக்கு புது நம்பிக்கை யையும், புது தைரியத்தையும், புதுவேகத்தையும், புது பெலனையும் கொடுக்கிறது. அதே நேரத்தில் தேவனால் நமக்கு கொடுக்கப்படும் ஒரு வாய்ப்பாகவும் புது வருடம் இருக்கிறது. அவருடைய சித்தம் செய்ய, அவருடைய வழியில் நடக்க, அவருடைய வார்த்தைகளை கற்றுத் தேற, அவர் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தில் வளர தேவனால் நமக்குச் கொடுக்கப்படும் கால அவகாசமாகவும் புது வருடம் இருக்கிறது.

லூக்கா 13:6–9ல், ஓர் உவமையை வாசிக்க முடியும். அதிலிருந்து சில காரியங்களை தியானித்து கற்றுக் கொள்வோம். இந்த உவமையிலே, ஒரு அத்திமரத்தைப் பற்றி இயேசு கூறுகிறார். வசனம் 6ல்– அந்த அத்திமரம் ஒரு திராட்சை தோட்டத்தில் இருப்பதாக வாசிக்கிறோம். வழக்கமாக அத்திமரங்கள் காடுகளிலும், வழிகளின் அருகேயும் காணப்படக்கூடிய ஒரு மரம். அதை யாரும் பராமரிக்கமாட்டார்கள். எப்படி நம் ஊர்களின் சாலையோரங்களில் புளியமரங்களும், வேப்பமரங்களும் வளர்ந்து இருக்கிறதோ அதைப் போல தான் அத்திமரமும். அதை யாரும் பெரிதாகப் பராமரிக்கமாட்டார்கள். ஆனால், இந்த உவமையில் காணக்கூடிய அத்திமரம் ஒரு திராட்சை தோட்டத்தில் இருக்கிறதை காண்கிறோம். அதுவும் தோட்டத்தின் நடுவில் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டது.

வாலிபர்களே! நாம் ஒவ்வொருவரும் அந்த அத்தி மரத்தைப் போலத் தான். எபேசியர் 2–ம் அதிகாரத்தில் பாவங்களினால் மரித்தவர்கள் இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியானவர்கள் கீழ்படியாமையின் பிள்ளைகள், கோபக்கினையின் பிள்ளைகள், நம்பிக்கையில்லாதவர்கள், தேவனற்றவர்கள் என்று நாம் முன்னிருந்த நிலைமையை சுட்டிகாட்டுகிறது. ஆயினும், கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிய நம்மை மனப்பூர்வமாக

ஒப்புக்கொடுத்தபடியால், இப்பொழுது தேவனுடைய திராட்சை தோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறோம். எப்படி வழியருகே இருக்கவேண்டிய அத்திமரம் வழக்கத்திற்கு மாறாக திராட்சை தோட்டத்தில் பராமரிக்கபட்டதோ, அதைப்போல நாமும் காக்கப்பட்டு வருகிறோம். தேவனுடைய பெலத்தினாலே.

சரி, அந்த உவமையில் அடுத்து நடந்தது என்ன? அந்த திராட்சத் தோட்டத்து எஜமான் அந்த அத்திமரத்திலே வந்து கனிகளைத் தேடினார். ஆம், அதைப் பராமரித்த தோட்ட மூன்று ஆண்டுகளாக கனிகளைத் தேடினார். ஆனால், கனிகளை காணவில்லை. எனவே, எஜமான் தோட்டகாரனிடம் அத்திமரத்தை வெட்டி போட சொன்னார். வாலிபர்களே, ஒரு வேளை நம் வாழ்கையிலே தேவன் வந்து கனிகளை தேடினால், கனிகளைக் கண்டுபிடிப்பாரா? கனிகள் என்றால் என்ன? நம் எண்ணத்திலும், செயலிலும், சொல்லிலும், யோசனைகளிலும் கவனமாயும் ஜாக்கிரதையாயும் இருந்தால் நாம் நல்ல கனிகளைக் கொடுக்கிறவர்களாக இருப்போம். நம் எஜமானரான தேவன் கடந்த ஆண்டில் நம் வாழ்விலும் கனிகளைக் தேடியிருப்பார். அப்படித் தேடின போது நல்ல கனிகளை கண்டு பிடித்து மகிழ்ந்திருப்பாரா? அல்லது ஏமாற்றம் அடைந்திருப்பாரா? சிந்தியுங்கள்.

வசனம் 8–ல்– அந்தத்திராட்சை தோட்டத்தைப் பராமரிக்கும் தோட்டக்காரன் எஜமானிடம் இன்னும் ஓர் ஆண்டு கால அவகாசம் கேட்டான். அந்தக் கனிகொடாத அத்திமரத்திற்காக தோட்டக்காரன் பரிந்து பேசுகிறான். கடந்த மூன்று ஆண்டுகளாக கனி கொடுக்காமல் இருப்பதை மறந்து இன்னும் ஒரு வாய்பாக ஒரு வருடம் கால அவகாசம் கேட்டான். அந்த ஒரு வருடத்தில் எப்படியாவது கனிகொடுக்க வைத்துவிட வேண்டும் என்று. அதை சிறப்பாக பராமரிக்க முடிவு செய்தான்..... நான் மரத்தைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன் என்று எஜமானிடம் சொன்னான்.

வாலிபர்களே! ஒரு வேளை நமக்கு கொடுக்கபட்டிருக்கும் இப்புதிய ஆண்டு, நமக்காக பரிந்து பேசும் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவால் ஒரு வாய்ப்பாக கொடுக்கப் பட்டிருக்கலாம். நாம் கனி கொடுக்காத ஒரு வாழ்வைக் கடந்த ஆண்டுகளில் வாழ்ந்திருந்தால் பரவாயில்லை. இந்த ஆண்டில் நாம் கனி கொடுக்க முயற்சி செய்வோம்.

அன்பு, சந்தோஷம்,சமாதானம்,நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்ற ஆவியின் கனிகளை நம் வாழ்வில் வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கப்

பிராயசப்படுவோம். அப்படி கனிக்கொடுக்கும் வாழ்வை நாம் வாழ நம் தேவன் நமக்கு நிச்சயம் உதவி செய்வார். நாம் அவருடைய திராட்சை தோட்டத்தில் இருக்கிறபடியால், அவருடைய வார்த்தைகளின் வழியாக நம்மை நடத்துவார்.

ஒரு வேளை நமக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு வாய்பிலும் நாம் தவறினால், II கொரி 5:10ல் வாசிக்கிறபடி நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படும்போது நாம் வெட்டப்பட் அத்திமரமாகி விடுவோம்

எனவே வாலிபர்களே! நமக்கு கொடுக்கப்பட்ட இப் புதிய ஆண்டை, தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு பெரும் வாய்ப்பாக கருதி, கனிகளை கொடுக்கும் அத்திமரமாக மாறுவோம். மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

பரலோகத்தின் தேவன் உங்களைக் பராமரித்துக் காத்து வழிநடத்துவாறாக! ஆமென்!!

## பெருமையின் அபாயம்

1. பெருமை ஜனங்களை கொடூரமான காரியங்களைச் செய்ய வைக்கிறது [ எஸ்தர் 3:5,6]
2. பெருமை அழிவைக் கொண்டு வருகிறது [ எஸ்தர் 6:11 நீதிமொழிகள் 16:18]
3. பெருமை ஒருவருடைய வெற்றியைக் குறித்து தவறான மதிப்பீட்டிற்குள் வழிநடத்துகிறது. [ உபாகமம் 8:11-14]
4. பெருமை ஒருவர் தன்னுடைய சாதனைகளைக் குறித்து தம்பட்டம் அடிக்க வைக்கிறது [ தானியேல் 4:30]
5. பெருமை பழிவாங்குதலுக்கு வழிவகுக்கிறது [யாத்திராகமம் 14:5]
6. பெருமை உலகத்தன்மைக்கு வழிவகுக்கிறது [ I சாமுவேல் 8:19,20]

சிறுவர் பகுதி

# கீழ்ப்படிதல்

Dr. ப்ரைசி ஏபில்

என்ன தம்பி, தங்கைகளே எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

நம் முன்னேற்றத்திற்கு கோபம், கீழ்ப்படியாமை, பக்தி இல்லாமை, சண்டை, பொறாமை, சோம்பல் என சில துர்க்குணங்கள் தடையாக இருக்கின்றது. இந்த மாதம் கீழ்ப் படியாமையை பற்றியும், கீழ்ப்படிதல் பற்றியும் சிந்திக்கலாம்.

தேவன் உலகத்தைப் படைத்து ஆதாமையும், ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் வைத்து, தோட்ட நடுவிலிருக்கும் மரத்தின் கனியை புசிக்க வேண்டாமென்று சொல்லியும் பிசாசின் வஞ்சகத்தால் தேவ வார்த்தையை கீழ்ப்படியாமல் ஏவாள் கனியைப் புசித்து பின் தன் கணவனாகிய ஆதாமுக்கும் கொடுத்து முதல் பாவமாகிய கீழ்ப்படியாமையை உலகுக்குக் கொண்டு வந்ததை நீங்கள் அறிவீர்களென நம்புகிறேன். ஆக, கீழ்ப்படியாமையே உலகில் உண்டான முதல் பாவம்.

இன்று இவ்விதழில் பெற்றோருக்கு கீழ்ப்படியும் இரண்டு பேரை சந்திக்கப் போகிறோம்.

1. ஈசாக்கு
2. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

கர்த்தர் ஆபிரகாமின் கீழ்ப்படிதலையும், விசுவாசத்தையும் சோதிக்க அவனின் புத்திரனும், ஏக சுதனும், நேசக் குமாரனாகிய ஈசாக்கை மோரியா தேசத்து மலையில் தகனபலியாக பலியிட உத்தரவிட்டார்ங. (ஆதியாகமம் 22:1 உடனே ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து ஈசாக்கை கூட்டிக்கொண்டு தகன பலியிட விறகு கட்டைகளோடு, இரு வேலைக்காரரோடு கழுதையின் மேல் சேணங்கட்டி புறப்பட்டு செனறான். வழியில் தகன பலிக்கு ஆடுகள் எங்கே என கேட்ட தன் மகனுக்கு **கர்த்தர் பார்த்துக்கொள்வார்** எனச் சொல்லி தேவன் காண்பித்த இடத்திற்கு வந்து பலிபீடத்தை உண்டாக்கி கட்டைகளை அடுக்கி ஈசாக்கை கட்டி பலிபீடத்தின் மேல் கிடத்தி தன் நேசக்குமாரனை வெட்டும்படிக்கு தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான். உடனே தேவன் பிள்ளையை ஒன்றும் செய்யாதே என்று தடுத்து, ஆபிரகாம் தேவனுக்கு பயன்படுகிறவன் என உலகுக்கு உணர்த்தினார்.

எனக்கு அருமையான கர்த்தரின் பிள்ளைகளே! ஈசாக்கு பலியிட ஆடில்லாதிருந்தும், தன் கைகள்கட்டப்பட்டு விறகுக்

கட்டைகளின் மேல் படுக்க வைத்து கத்தியால் குத்தப்பட இருந்த நிலையிலும் தன் தகப்பன் சொல்படியும், செயல்படியும் கேட்டு கீழ்ப்படிந்து பெற்றோரின் கீழ்ப்படிதலுள்ள பிள்ளை என பெயர் பெற்றான்.

நம் ஆண்டவராகிய கிறிஸ்துவும் தாம் தேவனின் ஒரே குமாரன் என்று அறிந்திருந்தும் தேவ சித்தத்தின்படி யோசேப்பு, மரியாளின் புத்திரனாக பூமியில் 30 வயது வரை தன் தாய், தகப்பனுக்கு கீழ்ப்படிந்து நாசரேத்தூரில் பெற்றோருக்கு நல்ல பிள்ளையாக வாழ்ந்தார் [மாற்கு2:2] தன் தாயுடன் தன் முப்பதாவது வயதில் கானான் என்னும் இடத்தில் நடந்த திருமணத்திற்கு சென்றிருந்து திருமணத்தில் திராட்சரசம் குறைவுபட்டதை மரியாள் கண்டு தன் மகனாகிய கர்த்தரிடம் சொல்ல தன் வேளை வந்த போது தேவ சித்தத்தின்படி ஆறு கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பச்சொல்லி, தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றி முதலாம் அற்புதத்தை செய்தார். [யோவான் 2:211]

தேவனுக்குப் பிறகு நம்மேல் அன்பாயிருப்பது நம் பெற்றோரே. அவர்கள் நம்மை கண்டிப்பதும், தண்டிப்பதும் நம் முன்னேற்றத்துக்கே என நினைவில் கொள்ள வேண்டும். உலக ரட்சகரான இயேசு பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து சொல்கேட்டு நடந்ததையும், தன் உயிர் பலியிடப் போகும் நிலையிலும் தகப்பனுக்குக் ஈசாக்கு கீழ்ப்படிந்து தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்ததையும் நாம் நம் நினைவில் கொண்டு தேவன் நமக்கு ஈவாக தந்த பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடப்போம்.

சரி பிள்ளைகளே! அடுத்த மாதம் சந்திக்கும் வரை மட்டுமல்ல, பெற்றோருக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடப்போம் என தீர்மானம் கொண்டுள்ள உங்களோடு சர்வவல்ல தேவன் இருப்பாராக. ஆமென்! ✝

## இளைஞர்களுக்கான சில புத்திமதிகள்

- நீதிமான்களில் பாதைகளில் நட [நீதி2:20].
- பெற்றோர்களுக்குக் கீழ்ப்படி [நீதி3:11].
- தீயவர்களோடு சேராதே [நீதி 1: 10 –19]
- எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக்கொள் [நீதி 4:23]

# புதிய வாழ்க்கை

**சகோ. K.M. பிலிப் பவானி**

**அ**ன்பான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள். இப்புதிய ஆண்டின் துவக்கத்தில் நாம் பெற்றுக் கொண்ட புதிய வாழ்க்கை குறித்து புரிந்துகொள்வோம். மனித வாழ்க்கையில் இரண்டு பிறப்புகள் உண்டு. ஒன்று மாம்சத்தில் பிறப்பது. மற்றொன்று ஆவியினால் பிறப்பது (யோ 3:6). பூமியில் பிறந்து வாழ்ந்து கொண்டிருப்பது மாம்ச பிறப்பாகும் வேதாகமத்தின்படி மறுபடியும் பிறப்பது ஆவிக்குரிய பிறப்பாகும். (1:13). தேவனுடைய கிருபையால் நாம் சத்தியத்தைக் கேட்கவும், மனந்திரும்பவும், ஞானஸ்நானம் பெற்று பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுக்குள் வாழும் பாக்கியம் பெற்ற நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம். இப்புதிய பிறப்பே ஆவிக்குரிய புதிய வாழ்க்கையின் ஆரம்பமாகும். இதில் முடிவு பரியந்தம் நிலைத்து நிற்க இதன் முக்கியத்துவத்தையும் ஆசீர்வாதத்தையும் தெரிந்து கொள்வது மிக அவசியமாகும்.

முதலாவது, மறுபடியும் பிறக்குமுன் இருந்த பழைய வாழ்க்கைக்கும், இப்பொழுது வாழும் புதிய வாழ்கைக்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்வோம். பழைய வாழ்க்கையானது பாவமானது (ரோமர் 3:23); தேவனற்றது (யோவான் 3:8) நம்பிக்கையற்றது (நீ 11:7) சாத்தானோடு உறவு கொண்டது (1நீதி 2:26) பூமிக்குரியதும் நரகத்திற்குரியதுமாயுள்ளதாகும். (சங் 9:7) புதிய வாழ்க்கையோ. பரிசுத்தமானது புதுசிருஷ்டியாகும் (1கொரிந் 5:17). பிதாவையும் குமாரனையுமுடையது(1யோவான்9) நம்பிக்கையுள்ளது நித்திய ஜீவனுக்குரியது (யோவான் 5:24) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரோடு மட்டுமல்லாமல் பூமியில் வாழும் சகல பரிசுத்தவான்களோடும் உறவு கொண்டது. (கொலோ1:13) பூமிக்குரியதும் பரலோகத்திற் குரியதுமாகும் (கொரி1:20).

பிரியமானவர்களே! புதிய வாழ்க்கைக்கு தகுதியான நாம் அதன் மேன்மையையும் ஆசீர்வாதத்தையும் அனுபவிக்க வேண்டும். நாம் தினமும் கண்ணாடியைப் பார்த்து நம்மை சீர்செய்து கொள்கிறோம். நல்லது. ஆனாலும், காற்று வீசுகிறது; தலை கலைந்துவிடுகிறது, புழுதி முகத்தில் படிந்துவிடுகிறது. இது தவிர்க்க முடியாத ஒன்று. மீண்டும் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் கண்ணாடியில் பார்த்து சீர்செய்து கொள்கிறோம். ஆம், இப்பாவ உலகில் நம் இருதயத்தை சீர்கெடுக்கும் பாவங்கள் உண்டு. ஆனால், தேவபிள்ளைகளாகிய நாம் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வேதமாகிய கண்ணாடியைப்

பார்த்து இருதயத்தை சீர் செய்து கொள்ள வேண்டும். "வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் செய்து கொள்வான்? உம்முடைய வசனத்தின் படி தன்னைக்காத்துக் கொள்வதினால் தானே" என்றும் "உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லா பொய் வழிகளையும் வெறுக்கிறேன்" என்றும் தாவீது தன் அனுபவத்தில் கூறுகிறார் [சங் 119:9.104]. மேலும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வேதத்தை உற்று நோக்குவோமேயானால் அது நம்மை "துன்மார்க்க ருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும்" நம்மை காத்துக் கொள்ளும். நமக்கு கிடைத்த புதிய வாழ்க்கையையும், நாம் தக்க வைத்துக்கொள்ள முடியும். தயவு செய்து வேதத்தை திறந்து யாக் 1: 23, 24 – 22 வாசியுங்கள்.

அன்பானவர்களே! புதிய வாழ்க்கையை பெற்ற நாம் சற்று நின்று பின்னோக்கிப் பார்த்தால் – மனிதனின் நிலை, **நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை. எல்லோரும் வழிதப்பி ஏகமாய் கெட்டுப்போனார்கள்** என்ற பரிதாப நிலைதான் [ரோமர் 3:10,11,12]. உண்மையில் தேவனின் படைப்பில் மனிதன் தேவசாயலாக, பரிசுத்தமாகவே படைக்கப்பட்டான். ஆனால், கட்டளையை மீறிய பாவத்தால் பரிசுத்தத்தை தேவசாயலை, தேவனையும் இழந்து போனான். ஆனாலும் அன்புள்ள தேவன், "நாம் சத்துருக்களாயிருக்கை யில், அவருடைய குமாரனின் மரணத்தினால் அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம் [ரோமர் 5:10] மீண்டும் தேவ உறவைப்பெற்று பரிசுத்தவான்களாக புதிய வாழ்க்கைக்குள் பிரவேசித்திருக்கிறோம். இந்த புதிய மாற்றம் நம் இருதயத்திற்குள் ஏற்பட வேண்டும். ஏனெனில், எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் , மகாகேடுள்ளதுமாயிருக்கிறது [எரேமியா 17:9].

இருதயத்திலிருந்து புறப்படுகிறவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்பதை இயேசு தெளிவாகக் கூறியுள்ளார்[மாத் 7:21,23] மேலும், மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை [1 சாமு 16:7]. ஆகவே, பாவம் கழுவப்பட்ட நம் இருதயத்தில் தேவன் இரட்சிப்பின் சந்தோஷத்தையும், பரிசுத்தத்தையும், தெய்வீக சுபாவங்களையும் காணும்படியாய் நம் இருதயத்தை முற்றிலும் தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்போம். நம் புறம்பான மனுஷனானது நாளுக்கு நாள் அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்ட[2 கொரி 4:16] தேவவசனத்தின்படி காத்துக் கொள்வோம். தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்

நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் என்று உண்மையாய் ஊக்கமாய் ஜெபிப்போம். அப்பொழுது நாம் வேண்டிக் கொள்வது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்கிறோம் [1யோவான் 3:22]. ஆம் நம் புதிய வாழ்க்கை தேவ ஆசீர்வாதத்தை பெற்றுத்தரும்.

இப்புதிய வாழ்க்கை அடைவதென்பது தேவன் கொடுக்கும் **இலவச ஈவு.** இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம் [ரோ 3:24]. இதில் நம் பங்கு – விசுவாசிக்க வேண்டும். [அப் 16:31]. அதற்கு மனம் வேண்டும். அதில் உறுதி வேண்டும்.[ஏசா 26:23]. இப்புதிய வாழ்க்கைக்காக தேவன் கொடுத்த ஈவு ஒரே குமாரன் கிறிஸ்துவைக் கொடுத்தார் [யோவான் 6:54]. பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்தார் [யோவான் 15:27] சபையில் சேர்ந்தார் [அப் 2:4.7]. கையில் வேதாகமத்தை கொடுத்துள்ளார் [யோ 5:39]. அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்க உரிமையை கொடுத்துள்ளார் [கலா 4:6]. இன்னும் கொடுப்பார். அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம்[1யோவான் 3:2]. இப்புதிய வாழ்க்கையால் தொடர்ந்து தேவ ஈவை அனுபவிப்போம்.

ஒரு குழந்தை பிறந்தால் மட்டும் போதாது. நாளுக்கு நாள் வளர்ச்சி அடையவேண்டும். அப்படியே மறுபிறப்பை பெற்ற நாம் அதில் தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும் . அதற்கு, அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக [எபே 4:15] என்ற ஆலோசனையை பிடித்துக் கொள்வோம். நாம் அன்பில் வளர வேண்டும் [எபே 4:15] உள்ளான மனுஷனில் வளர வேண்டும்[11கொ 4:16]. உலகத்தை ஜெயிக்க விசுவாசத்தில் வளர வேண்டும் [1யோவான் 5:4]. கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளர வேண்டும்[11பேதுரு 3:18]. இப்படி நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் [1பேதுரு 2:3]. தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து அவர்களை [அந்தி கிறிஸ்து ] ஜெயித்தீர்கள். ஏனெனில், உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் [1யோவான் 4:4]. இந்த உற்சாகத்தோடு புதிய வாழ்க்கையை தொடருவோம். கிறிஸ்துவின் வருகையில் மற்றுமொரு நித்தியமான புது வாழ்க்கையை பரலோகத்தில் தேவன் நமக்காக வைத்திருக்கிறார். சுதந்தரித்துக் கொள்வோம். ஆமென்!!!

✝

# எதை முதலாவது செய்ய வேண்டும்?

சகோ. பாண்டியன்

அன்பின் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும் , சமாதானமும் உண்டாவதாக. தேவ கிருபையால் நமக்கு நேரிட்ட சகல ஏற்றத்தாழ்வுகளிலம் தேவன் நம்மோடிருந்து கடந்த ஆண்டை நல்லபடியாகக் கடந்து வரவும். இந்த புதிய ஆண்டில் பிரவேசிக்கவும் செய்திருக்கிறார். அதற்காக, நன்றி சொல்லுவோம். நம்முடைய நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் தேவனிடத்தில் இருக்கிற படியால் முதலாவது நாம் எதைச் செய்ய வேண்டும் என்று அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தேவன் அவற்றை நமக்கு வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

சொல்வது எளிது செய்வது கடினம் என்று சொல்வதுண்டு. ஆனால், நம் ஆண்டவர் இயேசு தாம் சொன்னபடியே செய்து காண்பித்தவர் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. சிலர் தாங்கள் செய்வதெல்லாம் சரி என்ற நினைப்பில் இருப்பார்கள்! அப்படிப்பட்ட ஒருவன் தான் இயேசுவிடம் பிரதானக்கட்டளை எதுவென்று கேட்டபோது உன் தேவனிடத்தில் முழு இருதயத்தோடே அன்பு கூருவதே பிரதானக் கட்டளை என்றார். நாமும் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்கள்தான்! ஆனால் அப்படிப்பட்டவர்கள் தன் சகோதரனிடத்தில் அன்பு கூர வேண்டும். பிறரிடததில் அன்பு கூருதல், மனைவியினிடத்தில் அன்பு கூருதல் போன்றக் காரியங்களையும் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்கிறது வேதம்! ஆனால், அநேகருக்கு பக்தி இருக்குமளவுக்கு அன்பு இருப்பதில்லை! அதனால் தான் பவுல் சொல்லும் போது, மலைகளைப் பேர்க்கத்தக்க விசுவாசமிருந்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை என்கிறார். I கொரி 13:2.

முதலாம் கற்பனையின்படி தேவனிடத்திலும், பிறனிடத்திலும் அன்பு கூருவது இன்னும் ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக தேவனுக்கு முதலிடம் கொடுப்பவர்கள் உலகப்பொருளுக்கும் அதே முக்கியத்துவம் தரக்கூடாது. ஆனால் அநேகர் இந்த விஷயத்தில் தவறுகிறார்கள். தேவனிடம் நம் முழு அன்பு இருக்கும் போது ஒரு போதும் சபைக் கூடுதலை விட்டுவிட மாட்டோம். மற்றவரையும் கூடிவருவதற்கு உற்சாகப்படுத்துவோம். ஆனால், இன்றைக்கு அநேகர் பொருளாதாரக் காரணங்களுக்காக தங்கள் பிள்ளைகளையும் சேர்த்து படிப்பு, சம்பாத்தியம் போன்ற விஷயங்களுக்கு சபைக் கூடுதலை தவிர்க்கிறதைப் பார்க்கிறோம். இதைத்தான் ஆண்டவர் இரண்டு எஜமான்களுக்கு உங்களால் (ஊழியம்) உண்மையாய் இருக்கமுடியாது என்றுக் குறிப்பிட்டார்.

ஆகவே, உலகப்பொருள் நம் எஜமானராக இராதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

உலகத்தில் அன்பு கூருவது தேவனிடத்தில் அன்பாயிருப்பதைத் தடை செய்கிறது. எது உலகத்தில் அன்பு கூருவது? என்றால் யோவான் மூப்பர் சொல்கிறார் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகளே [I யோவான் 2:15]. அநேக இரட்சிக்கப்பட்ட வாலிபப்பிள்ளைகள் காதல் கத்தரிக்காய் என்று உலகக் காரியங்களில் ஈடுபடாமல் முதலாவது தேவனிடத்தில் அன்பு கூருவதற்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஏனெனில் ஆண்டவர் இயேசுவும் தாய் அல்லது தகப்பன், மகன் அல்லது மகள் இவர்களிடம் கூட என்னிலும் அதிகமாய் அன்புகூர்ந்தால் எனக்குப் பாத்திரன் அல்ல என்றார். [மத் 10:37] உறவுகள் மாத்திரம் அல்ல உபத்திரவம் கூட கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னைப்பிரிக்காது என்ற வைராக்கியம் நமக்கு வேண்டும் [ரோமர் 8:39]

இப்படி நாம் தேவனிடத்திலும் அவருடைய குமாரனிடத்திலும் அன்பு கூர்ந்த பிற்பாடு நம் பெற்றோரை இவ்வுலகத்தில் முதலாவது கனம் பண்ண வேண்டும் [எபே 6:1-3]. இது வாக்குத்தத்தம் உள்ள முதலாம் கற்பனை என்று பார்க்கிறோம். அதன் அர்த்தம் அப்படி செய்தால் உனக்கு நன்மையும், நீடித்த வாழ்நாளும் கிடைக்கும் என்பதே அகும். சகோதர அன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்த ஒருவன் முன்பு தன் சகோதரனோடே ஒப்புரவான பின்பு தான் காணிக்கை செலுத்த வேண்டும் என்றார் இயேசு அப். உபதேசத்திலும் கிறிஸ்துவுக்குள் தேவன் மன்னித்ததைப் போல ஒருவருக்கொருவர் மன்னிக்கும் குணம் வேண்டும் என்கிறது [எபே 4:32]. நாம் மற்றவர்களை மன்னியாவிட்டால் நமக்கும் தேவனிடத்தில் இருந்து மன்னிப்புக்கிடையாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட காரியங்களில் இந்த புதிய ஆண்டில் மேலும் வளரப் பிரயாசப்படுவோம்.

பஞ்ச காலத்தில் சாறிபாத் ஊர் விதவையை சந்தித்த எலியா இருந்தக் கொஞ்சமாவில் முதலாவது தனக்கு ஒரு சிறு அப்பம் சுட்டுக் கொடு என்றார். அப்படி அவள் கொடுத்த போது தேவன் அவளை அந்தப் பஞ்சகாலம் முழுவதும் ஆசீர்வதித்தார். ஊழியர்களை முதலாவது கனம் பண்ணும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். அப்படியாக அடியேனையும் கனம் பண்ணும் ஏழை விதவை சகோதரிகளைக் குறித்து கண்ணீரோடு தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன்.[I ராஜா 17:13] புதிய ஏற்பாட்டிலும் உங்களை விசாரிக்கிறவர்களையும், வசனத்தை போதிக்கிறவர்களையும் கனம் பண்ண வேண்டும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருப்பதை நினைவு கூருவோமாக [எபி 13:17, Iகௌரி 9:11,14]

அடுத்து முதலாவதாக நாம் செய்ய வேண்டியது உட்புறத்தை சுத்தமாக வைப்பது. அநேகர் மற்றவரின் குறைகளையே எடை போட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால், முதலாவது உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு என்றார். பிறரைக் குற்றவாளியாகத் தீர்ப்பவனை தேவனும் நியாயத்தீர்ப்பு செய்வார். ரோம 2:1–3 மேலும், நாம் மற்றவர்களைப் போல வெளிப்புற நல்லவர்களாக இருக்க முடியாது. காரணம் நாம் ஆராதிப்பது உள்ளந்திரியங்களை சோதித்தறியும் தேவனை. எனவே, தேவனுக்கு பயந்து இருதய சுத்தமுள்ளவர்களாக நாடவேண்டும் (மத் 23:26).

இப்படிப்பட்ட அநேக காரியங்கள் நாம் நடப்பிக்க வேண்டியிருப்பதால் தான் ஆண்டவர், முதலாவதாக தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்றார். இந்த புதிய ஆண்டில் நேரப்படி கூடி வருதலுக்கு முக்கியத்துவம் தந்து ஏசாயா சொல்வதைப் போல கர்த்தருடைய நாளை மனமகிழ்ச்சிக்குரிய நாளாக மகிமையான நாளாக நாம் எண்ணுவோமானால் தேவன் நம்மை இந்தப் புதிய ஆண்டில் நம்மை உயர்த்தி மேன்மைப்படுத்துவார். வனாந்தரத்தில் முன் செல்லும் தூதனை ஆயத்தம் பண்ணிய தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும், சபையாரையும் மென் மேலும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

## வேண்டாமே ஒத்தி வைத்தல்

- **வேத வசனங்களை கேட்க ஒத்தி வைக்காதே!**
- **மனமாற்றம் அடையும் வாய்ப்பை ஒத்தி வைக்காதே!**
- **மனமாற்றத்தை ஒத்தி வைக்காதே!**
- **இரட்சிப்பின் சிலாக்கியத்தை ஒத்தி வைக்காதே!**
- **ஏனெனில், இறுதி நாளில் நித்திய நரகத்தை ஒத்தி வைக்க முடியாது.**

கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

# ‘போராட்டக்காரன் யாக்கோபு (part I)‘

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை

**முன்னுரை:**

1. யாக்கோபினுடைய வாழ்க்கையில் தொடர்ந்து ஒரு போராட்டத்தின் மேல் இன்னொரு போராட்டம் வந்தது.

2. அதன்படி பிறக்கும் முன்பே தன் தாயின் கர்ப்பத்தில் தன் அண்ணனோடு மோதிக்கொண்டான், ஆதி. 25 : 21 – 23.

3. வாலிபனாக இருக்கும்போது, யாக்கோபு தன் அண்ணனாகிய ஏசாவோடு போட்டிபோட்டான்; அவன் ஏசாவோடு பேசி ஏசாவின் சேஷ்டபுத்திர பாகத்திற்கு பதிலாக அப்பத்தையும் பயிற்றங் கூழையும் கொடுத்து, அதைப் பெற்றான், ஆதி. 25 : 24 – 34.

4. தகப்பனாகிய ஈசாக்கு மூத்த மகன் ஏசாவினிடத்திலும், தாய் ரெபெக்காள் இளையமகன் யாக்கோபினிடத்திலும் பட்சமாய் இருந்தார்கள். இது வெவ்வேறு பிரச்சினைகளுக்கு ஆரம்பமாய் இருந்தது.

I. தன் அப்பாவின் ஆசீர்வாதத்தை சம்பாதிக்கும்படி தன் அண்ணனைபோல நடந்து தன் அப்பாவோடு போராடினான், ஆதி. 27 : 1 – 40.

அ. ஈசாக்கு முதிர்வயதானதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப் போனபோது, தன் மூத்த மகனை ஆசீர்வதிக்க விரும்பினான்.

ஆ. மூத்த மகனிடத்தில், காட்டிற்குச் சென்று வேட்டையாடி, அதை ருசியுள்ள பதார்த்தங்களாக சமைத்துக் கொண்டுவரும்படியும் அப்பொழுது அவனை ஆசீர்வதிப்பதாகவும் கூறினான்.

இ. இதைக் கேள்விப்பட்ட ரெபெக்காள் ருசியுள்ள பதார்த்தங்களை சமைத்து தனது இளையகுமாரனிடத்தில் கொடுத்தனுப்பினாள்.

ஈ. ஈசாக்கு கண்டுபிடிக்கக்கூடாது என்பதற்காக ஏசாவின் உடைகளையும் ஆட்டுத்தோலையும் அணிவித்து அனுப்பினாள்.

உ. எனினும் ஈசாக்கு பலவகையில் சோதித்துப்பார்த்து, ஏசாவாக எண்ணி யாக்கோபை ஆசீர்வதித்தான். இது ஒருவகையில் தேவனுடைய தீர்மானம் என்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும், சங். 135 : 4; மல். 1 : 2.

ஊ. இன்றைக்கும் அநேக குடும்பங்களில் குடும்பத்தலைவனாகிய தகப்பன் விருப்பத்தைவிட தாயின் விருப்பமே பிள்ளைகள் விஷயத்தில் செயல்படுத்தப் படுகிறது. இது ஒரு நேரத்தில் நன்மையாகிறது ஒரு நேரத்தில் தீமையாகியது.

எ. பெற்றோர் பிள்ளைகளிடத்தில் பட்சபாதம் காண்பிக்காமல், சமமாக நேசிக்கவேண்டும்.

II. ஏசாவோடு சண்டையிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படி வேறு தேசத்திற்கு ஓடிப்போனான், ஆதி. 27 : 41 – 44.

அ. தன் தாயார் ரெபெக்காளின் ஆலோசனையின்படி யாக்கோபு ஆரானிலிருந்த தன் தாய் மாமன் லாபானிடத்திற்கு ஓடிபோனான்.

ஆ. தாயாரான ரெபெக்காளுக்கு இதில் இரண்டு நல்ல நோக்கம் இருந்தது: ஒன்று, தன் குமாரர்களை இழந்துபோகக் கூடாது என்பதும்; இரண்டு, யாக்கோபு கானான் தேசத்து பெண்ணை மனைவியாக்கக்கூடாது என்பதும் ஆகும், ஆதி. 27 : 45 – 46.

இ. இதே விருப்பம் ஈசாக்குக்கும் இருந்தது: ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல், எழுந்து புறப்பட்டு, பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப்போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான், ஆதி. 28 : 1 – 2.

ஈ. பதான் அராம் (ஆரான்) என்னும் ஊருக்குப் போகும் வழியில், ஒரு ஏணி வானம் வரைக்கும் இருக்கும் ஒரு சொப்பனத்தை அவனுக்குக் கொடுத்தார். பதிலாக யாக்கோபு ஒரு பொருத்தனை செய்து தேவனோடு பேசி: தேவனானவர் என்னை ஆசீர்வத்தித்து என் அப்பாவின் வீடிற்கு பத்திரமாகக் கொண்டுவந்தால், யெகோவா என் தேவனாய் இருந்து, அவர் எனக்குக் கொடுப்பதில் பத்து சதவீதம் அவருக்குச் செலுத்துவேன் என்றான், ஆதி. 28 : 20 – 22.

உ. இப்படி ஏசாவினிடத்திலிருந்து யாக்கோபு தப்பித்துக்கொண்டு, தேவனோடு ஒப்பந்தம் பேசி, பதான் அராமுக்கு ஓடிப்போனான். அங்கே ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்த தன் தாய்மாமன் மகள் ராகேலை கண்டுபிடித்து, அந்தக் குடும்பத்தோடு இணைந்துகொண்டான், ஆதி. 29 : 1 – 14.

III அங்கு லாபான் அவனோடு போட்டிபோட்டான். யாக்கோபு லாபானுக்காக ஏழு வருஷங்கள் சேவை செய்து, சம்பளமாக தன் மகள் ராகேலை மனைவியாகக் கொடுப்பான் என்பதாக யாக்கோபோடே ஒப்பந்தம் பேசினான், ஆதி. 29 : 15 – 27.

அ. ஆனால், ராகேலுக்கு பதிலாக லாபான் தன் மூத்த மகள் லேயாளை யாக்கோபுக்குக் கொடுத்ததினால் லாபான் யாக்கோபை வஞ்சித்தான். யாக்கோபு ராகேலுக்காக இன்னும் ஏழு வருஷம் லாபானுக்கு சேவை செய்தான்.

ஆ. யாக்கோபு லேயாளைவிட ராகேலை நேசித்து முக்கியத்துவம் அவளுக்குக் கொடுத்தான். இதனாலே அவனுடைய மனைவிகளுக்குள்ளாக போட்டி வந்தது. இன்னும் ராகேல் ஆரம்பத்தில் மலடியாக இருந்து லேயாள் நான்கு ஆண் பிள்ளைகளை பெற்றாள் என்பதற்காகக்கூடப் போட்டி இருந்தது, ஆதி. 29 : 30 – 35.

இ. தன் மனைவிகளுக்காக யாக்கோபு 14 வருஷங்கள் சேவை செய்த பிறகு, யாக்கோபு லாபானோடு பேரம் பேசி: லாபான் தன் ஆடுகளில் புள்ளியும் வரியும் கருப்புமுள்ள ஆடுகளைக் கொடுத்தால் யாக்கோபு லாபானுடைய மற்ற மந்தையைக் காப்பாற்றுவான் என்று வாக்குக் கொடுத்தான், ஆதி. 30 : 27 – 34. தேவனிடத்திலிருந்து யாக்கோபிற்கு கனவு வந்தது, ஆதி. 31 : 9 – 12.

ஈ. பெலமான ஆடுகள் பொலியும்போது அவன் உரித்த மரகொப்புகளை அந்த ஆடுகளுக்கு முன்பு போடுவான், அப்பொழுது ஆடுகள் '...கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது.' அவைகள் யாக்கோபினுடைய சொத்து ஆயின, ஆதி. 30 : 39. பெலவீனமான ஆடுகள் பொலியும்போது யாக்கோபு கொப்புகளைப் போடவில்லை.

உ. பெலத்த ஆடுகள் புள்ளிகள் கொண்ட ஆட்டுக்குட்டியை போட்டதை லாபான் பார்க்கும்போது, யாக்கோபோடு இருந்த ஒப்பந்தத்தை மாற்றி, புள்ளியுள்ள ஆட்டுக்குட்டிகளை தன் சொந்தமாகக் கேட்டான். அப்பொழுதோ சிறந்த குட்டிகள் வெண்மையுள்ளதாய் இருந்தது. சிறந்த குட்டிகளைச் சம்பாதிக்கும்படி யாக்கோபோடு இருந்த ஒப்பந்தத்தை லாபான் பத்து தடவையாக மாற்றிக்கொண்டான், ஆதி. 31 : 7 – 9. யாக்கோபு சம்பளத்திற்காக லாபானுக்கு ஆறு வருஷங்கள் வேலை செய்த பிறகு, அவன் திரும்பி தன் அப்பாவாகிய ஈசாக்கினிடத்திற்குப் போகவேண்டும் என்று தேவன் தூதன்மூலம் தெரிவித்தார், ஆதி. 31 : 11 – 13. ஆகவே, அப்படி அவர்கள் பதான் அராமை விட்டுப்போனார்கள்.

ஊ. யாக்கோபுக்கு அறியாமல் ராகேல் தன் அப்பாவின் வீட்டு சுரூபங்களைத் திருடினாள். 'நூசிகளிமண் பலகைகளின்படி மாமனார் தன் வீட்டு சொரூபத்தை தன் மருமகனுக்குக் கொடுத்தால், அவன் அவனை தன் சுதந்தரவாளியாக்கினான் என்கிற அர்த்தம் ஆயிற்று.' (//storiesofourboys. com/2018/11/09/what&the&nuzi&tablets&from&1450&1350&bc&tell&us&about&the&bible/#:~:text=Household%20idols%20are%20also%20dis cussed, appointing% 20him%20as%20his%20heir.) ராகேல் தன் அப்பாவோடு போட்டி போட்டு, அவள் அவனை ஏமாற்ற முயற்ச்சித்தாள், ஆதி. 31 : 19 × 20.

**முடிவுரை:**

1. 1. லாபான் யாக்கோபைப் பின்தொடர்ந்து தன் வீட்டு சுரூபங்களைத் தேடினாலும் அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை. லாபானுடைய சந்தேகங்களுக்காக யாக்கோபு அவனைக் கடிந்துகொண்டான். அப்பொழுது அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதம் செய்யாமல் யாக்கோபும் லாபானும் ஆணையிட்டார்கள். இப்படியாக யாக்கோபு அந்த இடத்தை விட்டு போனதற்காக அந்தப் போட்டி முடிந்துபோயிற்று, ஆதி. 31 : 36, 51 – 53.

2. 2. அடுத்தது ஏசாவோடு இருந்த போட்டியை யாக்கோபு கவனிக்கவேண்டும். ஆனால் அவன் ஏசாவை சந்திப்பதற்கு முன், தேவனுடைய தூதர்கள் யாக்கோபை சந்தித்தார்கள், ஆதி. 32 : 1! யாக்கோபு விசுவாசத்தில் பெலனடைந்து, தேவனிடத்தில் உதவிக்காக விண்ணப்பம் செய்து, ஏசாவின் கோபத்தைத் தணிக்கும்படி ஒரு சமாதானத்தின் பரிசை அனுப்பினான், ஆதி. 32 : 9 – 15. யாக்கோபு அறியாமல் தேவனோடு போராடினதற்காக யாக்கோபோடு மல்யுத்தம் செய்ய தேவன் தன் தூதனை அனுப்பினார், ஆதி. 32 : 24 – 28.

3. 3. இந்த ஆராய்ச்சி ஏன் பிரயோஜனமுள்ளது? முதலாவது நமக்கு எவ்வளவு திறமை இருந்தாலும், என்ன சூழ்ச்சி செய்தாலும், நம் முன்னேற்றத்தைக் குறித்து தேவனானவரே முடிவு செய்வார். 'மனதின் யோசனைகள் மனுஷனுடையது; நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும்.' 'மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்; அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்,' நீதி. 16 : 1, 9.

4. இரண்டாவது தேவனானவர் யாக்கோபின் பிறப்பிலிருந்து அவனை ஆசீர்வதித்தார். ஏசா யாக்கோபிற்கு சேவை செய்வான் என்று தேவன் முன் கூறினார், ஆதி. 25 : 22 – 23.

பவுலானவன் யாக்கோபையும் ஏசாவையும் ஒரு உதாரணமாகப் பயன்படுத்தினான், ரோமர் 9 : 10 – 13. ஏசா சொத்துக்களையும் அதிகாரத்தையும் தன் பெலத்தினாலும், தைரியத்தினாலும் சம்பாதித்தான். அவன் ஈசாக்கினுடைய செல்லப்பையனாய் இருந்தாலும் தேவனானவர் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தை அவனுக்குக் கொடுக்கமாட்டாரே. அந்த ஆசீர்வாதத்தை யாக்கோபுக்குக் கொடுக்க தேவன் தெரிந்தெடுத்தார்; ஏனென்றால், யாக்கோபுக்கு பாவங்களும், பெலவீனங்களும் உண்டாயிருந்தாலும் அவன் தேவபயத்தோடு தேவனுக்காக வாழ்ந்தான்.

5. யாக்கோபின் நிமித்தமாக தேவன் லாபானையும் அவன் வீட்டையும் ஆசீர்வதித்தார். இன்றைக்கும் தேவன் தம் பிள்ளைகள் நிமித்தமாக அவர்களை ஆதரிக்கிறவர்களையும் பூமிக்குரிய வாழ்க்கையில் ஆசீர்வதிக்கிறார். மத். 5 : 45; அப். 14 : 16 – 17.

6. யாக்கோபின் மேலிருந்த கோபம் தணியும்படி தேவன் ஏசாவுக்கும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுத்தார், ஆதி. 33 : 8 – 9. இது இன்றைக்கும் உலகத்தில் நடக்கிறது. ஆமென்.

## *நல் வாழ்வுக்கு 7 முக்கிய குறிப்பு!*

*1) தேவனுக்கு முதலிடம் கொடு!*

*2) பிறரிடம் அன்பு கூரு!*

*3) மனதில் வெறுப்பை அகற்று!*

*4) கொடுப்பதில் தாராளமாக இரு!*

*5) ஆடம்பரம் தவிர்த்து விடு!*

*6) மன்னிக்க தாமதம் செய்யாதே!*

*7) தினம் ஜெபிக்க மறவாதே!*

# ஒரு பொதுவான விளக்கம்

*Cecil May, Jr*

ஒரு பொதுவான கட்டளை அதிகாரம் கொடுக்கிறது; அதே காரியங்களைக் குறித்த மௌனம் தடை செய்கிறது. அப்போஸ்தல கட்டளை பாடல் பாடுவதாகும்: மற்ற வகையான இசையைக் குறித்து மௌனம் காப்பது அவைகளை விலக்குவதாகும்.

இது நாம் பிள்ளைகளாக கற்றுக்கொண்ட பொதுவான விளக்கமாயிருக்கிறது. நம் அம்மா நம்மைப் பார்த்து கொல்லைப் புறத்தில் போய் விளையாடுங்கள் என்று சொன்ன போது கொல்லை புறம் என்ற இடம் குறிப்பிட்ட இடமாக இருந்தது. நம் சிறு வயதில் கொல்லைப்புறம் அல்லது வீட்டின் பின்புறம் பரிச்சயமான, சுவாரஸ்யமான ஓர் இடமாக இருந்தது. அம்மா நாம் தெருவில் விளையாடுவதையோ அல்லது அடுத்துள்ள வீட்டில் விளையாடு வதையோ குறித்து மௌனமாயிருந்தது அங்கெல்லாம் விளையாட நமக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது என்பது நமக்குப் புரிந்தது. இவைகளையெல்லாம் ஓர் உதாரணத்துக்காகச் சொல்கிறேன்.

இவைகளெல்லாம் நமக்கு மிக எளிதாகப் புரியும் போது ஆராதனை எங்கே ஏறெடுக்கப்பட வேண்டும்? எப்படி ஏறெடுக்கப்பட வேண்டும் போன்ற காரியங்கள் மட்டும் நமக்கு ஏன் புரிவதில்லை?

தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்.

***தேவ வார்த்தையை சந்தேகப்படாதே! சாத்தான் ஆதாம் ஏவாள் கொலை செய்யவோ,திருடவோ.. அல்லது பொய் சொல்லவோ தூண்டவில்லை! தேவனுடைய வார்த்தையை சந்தேகப்பட வைத்தான்! அது இப்போதும் தொடர்கிறது! ஜாக்கிரதை!***

## திருவிடை மருதூர் மற்றும் வலங்கைமானில் கடந்த 13, 14 ஜனவரி – 2024 –ல் நடந்த இலவச மருத்துவ முகாமின்போது...











## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026





**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

## எங்களது இதர வெளியீடுகள்

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்


**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**


















**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

**திருமறை தியானம்**
**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 - 7:00 மணி |
| வெள்ளி | காலை 6:30 - 7:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.